# மெட்ரோ ரயிலில் 15 ஆயிரம் மாணவர்கள் கல்விச் சுற்றுலா

சென்னை, ஆக.4: மெட்ரோ ரயில்களில் கல்விச் சுற்றுலாவாக ஜூன் 21-ஆம் தேதி முதல் செப்டம்பர் 3-ஆம் தேதி வரை 15,000 மாணவர்கள் பயணம் மேற்கொண்டுள்ளதாக சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சென்னை நகரில் மெட்ரோ ரயில் தொடர்பாக அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியாக வாரந்தோறும் கல்விச் சுற்றுலாவை சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் ஏற்பாடு செய்து வருகிறது.

சென்ட்ரலில் இருந்து விமான நிலையம் வரையிலும், ஏஜி டி.எம்.எஸ். முதல் விமான நிலையம் வரையிலும் மெட்ரோ ரயிலில் பயணம் செய்கின்றனர். அப்போது மெட்ரோ ரயிலின் சிறப்பு அம்சங்கள் பற்றி விளக்கப்படுகின்றன.

கடந்த ஜூன் 21-ஆம் தேதி முதல் செப்டம்பர் 3-ஆம் தேதி வரை 15,000 மாணவர்கள் கல்விச் சுற்றுலா சென்றதாகவும், ஆகஸ்ட் மாதத்தில், அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளைச் சேர்ந்த 2 ஆயிரம் மாணவர்கள் கல்விச் சுற்றுலா மேற்கொண்டு பயன் அடைந்துள்ளதாகவும் மெட்ரோ ரயில் நிர்வாகம் செய்திக் குறிப்பு மூலம் தெரிவித்துள்ளது.



மெட்ரோ ரயில் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் திங்கள்கிழமை கல்விச் சுற்றுலா சென்ற அரசுப் பள்ளி மாணவர்கள்.